வரையறுக்கப்பட்ட கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனி - 2024/2025

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)இலங்கை அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள்: நி.பி 1646 இன் படி	தேவையான ஒவ்வொரு நாளுக்குமான வாகனஓட்ட விளக்கப்படம் பராமரிக்கப்படாமலும் சமர்ப்பிக்கப்படாமலும், இரண்டு குழு வாகனங்களுக்கான முறையே ரூபா 3,054,302 எரிபொருள் செலவாகவும் மற்றும் ரூபா 4,222,225 பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால், இச்செலவுகளின் செயற்திறன் மற்றும் நியாயத்தன்மையை சரிபார்க்க இயலாமல் உள்ளது.	முகாமைத்துவ கம்பனியின் முடிவின்படி, சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்படும் கம்பனியின் வாகனங்களுக்கு ஓட்ட விளக்கப்படம் பராமரிக்கப்பட மாட்டாது. எனினும், பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவினங்கள் கம்பனியின் பெறுகை நடைமுறைக்கு இணங்கவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.	நிதிப்பிரமாணங்களின் அடிப்படையில் அனைத்து குழு வாகனங்களுக்கும் ஒவ்வொரு நாளுக்குமான வாகன ஓட்ட விளக்கப்படங்கள் பராமரிக்கப்பட வேண்டும்.
(ஆ)இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2006ஆம்	பிரதான பெறுகைத் திட்டமானது ஆகக்குறைந்தது மூன்று வருட காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட வேண்டும்	பெறுகைத் திட்டமானது வருடாந்த வரவுசெலவுத் திட்டத்துடன் ஒத்திசைவாக்கப்பட்டு, பிரதான பெறுகைத்	வழிகாட்டிகளுக்கு இணங்கி நடப்பதை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகள்

ஆண்டின் பெறுகை வழிகாட்டியின் உப-பிரிவு 4.2.1 இன் படி	என்பதுடன், அது ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்குள் வழக்கமாக இற்றைப்படுத்தப்படவும் வேண்டும். அத்துடன், அதனைத் தொடர்ந்து அடுத்த வருடத்திற்கான விரிவான வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். எனினும், கம்பனி இப்பிரதான பெறுகைத் திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தவறியிருந்தது.	திட்டமாகப் பயன்படுத்தப்படுகிறது. பெறுகைச் செயற்திறனை மேம்படுத்துவதற்கும் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும், வழக்கமாக மீளாய்வு செய்யப்படக்கூடிய ஒரு முறையான மூன்று வருட திட்டத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.	மேற்கொள்ளப்படடே வண்டும்.
(இ)2024 பெப்ரவரி 28 ஆம் திகதியிட்ட பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இல. 01/2024 இன்			
(i) 5ஆம் பந்தி	ஊழியர் நலன்புரிச் சங்கங்களுக்கு நிதிகள் மாற்றப்படக் கூடாது அல்லது மரண நன்கொடைகள், பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்கள் போன்ற ஏனைய நலன்புரி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படக் கூடாது. எனினும், 2024/2025 நிதியாண்டில் ஊழியர் நலன்புரி மற்றும் கேளிக்கை நடவடிக்கைகளுக்காக இக்கம்பனியானது ரூபா 3,223,000 தொகையைச் செலவிட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	கம்பனியானது ஊழியர் நலன்புரிச் சங்கத்திற்கு நிதிகளை மாற்றவில்லை மாறாக, அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு நடைமுறைகளின் கீழ் ஊழியர் நலன்புரிக்காக நேரடியாக ரூபா 3.2 மில்லியன் செலவிடப்பட்டது. மரண நன்கொடைகள் மற்றும் புலமைப்பரிசில்கள் போன்ற நலன்புரி நடவடிக்கைகள், நலன்புரிச் சங்கத்தினால் அதன் சொந்த நிதியைப் பயன்படுத்தித் தனியாகக் கையாளப்படுகின்றன.	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுடன் இணங்கி நடப்பதை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ii) 12ஆம் பந்தி	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி தேவையானவாறு, அமைச்சின் அங்கீகாரத்தைப் பெறாமல், கம்பனி 2024/2025 ஆம் ஆண்டில் பெருநிறுவன சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 3,443,000 செலவிட்டுள்ளதுடன், 5,175 கிலோகிராம் சீனியையும் (ரூபா 1,423,125) 22,330 கிலோகிராம் உரத்தினையும் (ரூபா	அனைத்து பெருநிறுவன சமூகப் பொறுப்பு மற்றும் நன்கொடைச் செலவினங்களும் அதிகாரப் பகிர்ந்தளிப்பு எல்லைகளுக்குள் மேற்கொள்ளப்பட்டதுடன், முகாமைத்துவ கம்பனியினாலும் மற்றும் பணிப்பாளர் சபையினாலும் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. சீனி மற்றும் உர விநியோகம் உள்ளடங்கலாக இந்நடவடிக்கைகள் அனைத்தும், சமூகம் மற்றும்	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுடன் இணங்கி நடப்பதை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	245,630) விநியோகித்திருந்தது.	பங்குதாரர்களுக்கு ஆதரவளிப்பதற்காக முறையான ஆளுமை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றுடன் நிறைவேற்றப்பட்டதாக முகாமைத்துவம் கருதுகிறது.	
(ஈ)2021 நவம்பர் 16 ஆம் திகதியிடப்பட்ட பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இல. 01/2021 இன் பிரகாரம் அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டுக் கையேட்டின் பிரிவு 5.1 இன் படி	பொருத்தமானவாறு வரிகள்/இலாபப்பங்கு விநியோகிக்கப்பட்ட பின்னரே, அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களுக்கு ஊக்கத்தொகை அல்லது இலாப அடிப்படையிலான ஊக்கத்தொகைகள் வழங்கப்பட வேண்டும். எனினும், 2024/2025 ஆம் ஆண்டில் இடைக்கால மற்றும் இறுதி இலாபப்பங்குகள் பிரகடனப்படுத்தப்படாமல், ஊழியர் ஊக்க ஊதியமாக ரூபா 106,674,221 செலுத்தப்பட்டிருந்தது.	பங்குதாரர் உடன்படிக்கையின் 5 ஆம் பிரிவின் கீழ், முகாமைத்துவ கம்பனி கம்பனியின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதுடன், 2024/25 ஆம் ஆண்டில் ஊழியர்களுக்கான பணிக்கொடைச் கொடுப்பனவுகளாக ரூபா 106.7 மில்லியன் அங்கீகரித்திருந்தது. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் கடன் தீர்ப்பனவு சோதனை தேர்ச்சியடைந்த பின்னரே இலாபப்பங்குகள் குறித்து பரிசீலிக்கப்படும் என்பதுடன், 2024/25 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இறுதி செய்யப்பட்டவுடன் கணக்காய்வாளரிடமிருந்து கடன் தீர்ப்பனவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும் என முகாமைத்துவம் எதிர்பார்க்கிறது.	இலாபப்பங்கு மற்றும் கடன் தீர்ப்பனவு தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரே, பொது நிறுவனங்கள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஊழியர் வெகுமதி அல்லது ஊக்கத்தொகைக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

(அ) மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 971,235,000 நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,024,701,000 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 1,995,936,000 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. கம்பனியின் விற்பனைகளின் கிரயம் ரூபா 1,682,473,000 ஆல் அதிகரித்து வருமானம் ரூபா 195,948,000 ஆல் குறைவடைந்தமையே பிரதான காரணமாக இருந்தது.

(ஆ) எக்ஸ்ரா நியூட்ரல் ஆல்கஹால் (ENA)ற்கான நேர்ச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 94.71 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இது முன்னைய ஆண்டிலிருந்த ரூபா 1,803,234,000 தொகையானது ரூபா 3,511,109,000 ஆக உயர்ந்துள்ளது. அதேநேரம் மீளாய்வாண்டின் வருமானம் 2.44 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது, இது முன்னைய ஆண்டிலிருந்த ரூபா 8,031,788,000 தொகையானது ரூபா 7,835,840,000 ஆக குறைவடைந்துள்ளது. இதன் விளைவாக, கம்பனியின் மொத்தலாபம் முன்னைய ஆண்டில்

ரூபா 4,254,952,000 இலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 2,376,530,000 வரை அதாவது ரூபா 1,878,422,000 ஆல் அல்லது 44.15 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதுடன் மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 971,235,000 தேறிய நட்டமும் ஏற்பட்டுள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவக் கருத்துரை	பரிந்துரை
(அ) கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட தகவல்களின்படி, இக்கம்பனி 2022 முதல் 2025 வரை தமண பிரதேச சபைக்கு வரிப்பணமாக ரூபா 621,658 செலுத்தியுள்ளது. எனினும், மொத்தமாக உள்ள 210 உத்தியோகபூர்வ இல்லங்களில் 186 இல்லங்கள் அனுமதியற்ற நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக, இந்த அனுமதியற்ற ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து இல்லங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனி எவ்வித சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கவில்லை.	அரசாங்கத்துடனும் (51%) தனியார் தரப்பினருடனும் (49%) எட்டப்பட்ட பங்குதாரர் உடன்படிக்கையின் கீழ் கல்லோயா பெருந்தோட்டக் கம்பனி நிறுவப்பட்டது. அரசாங்கத்தின் ரூபா 516 மில்லியன் பங்குரிமையில் சொத்துக்களும், 277.7539 ஹெக்டேயர் பரப்பளவிற்கான 30 வருட காணி குத்தகை வாடகைகளும் உள்ளடங்குகின்றன எனினும் குத்தகை உடன்படிக்கை இன்னும் இறுதி செய்யப்படவில்லை. ஆக்கிரமிக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்கள் மீது சட்டபூர்வ அதிகாரம் இல்லாதபோதிலும், கம்பனி அனைத்து வரிப்பணங்களையும் செலுத்தியுள்ளது. குத்தகை உடன்படிக்கையை இறுதி செய்யும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன, அதன் பின்னர் கம்பனி பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.	காணி குத்தகை உடன்படிக்கையானதுதாமதமின்றி இறுதி செய்யப்பட வேண்டும் என்பதுடன், அனுமதியற்ற முறையில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அல்லது அவற்றை மீளப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ) 2009 மார்ச் 06 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க, கரும்புச் செய்கைக்காகத் தமண பிரதேச செயலகப் பிரிவில் 207.3584 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்ட காணி 30 வருட குத்தகைக் காலத்திற்காக இக்கம்பனிக்கு வழங்கப்பட்டது. குத்தகைக் காலத்தின் 16 வருடங்களுக்கும் மேலான காலம் கழிந்துவிட்ட போதிலும், கம்பனி இதுவரை முறையான குத்தகை உரிமையைப் பெற்றுக்கொள்ளவில்லை. இதில் 170.7345 ஹெக்டேயர் பரப்பளவிற்கான குத்தகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அம்பாறை நில அளவைத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய 36.6239 ஹெக்டேயர்	நிதி அமைச்சு, காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் மற்றும் அம்பாறை மாவட்டச் செயலாளர் ஆகியோரின் ஆதரவுடன் காணி குத்தகை உடன்படிக்கையை இறுதி செய்யும் பணிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் 184.7921 ஹெக்டேயர் பரப்பளவிற்கான ஆவணமாக்கல் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு ஜனாதிபதியின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிகமாக உள்ள 17.686 ஹெக்டேயர் பரப்பளவிற்கான நில அளவைப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள காணிப் பரப்பளவு அடுத்த கட்டத்தில் இறுதி செய்யப்படும்.	குத்தகை உரிமையைப் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	பரப்பளவிற்கான நில அளவை மற்றும் ஆவணமாக்கல் பணிகள் இன்னும் நிலுவையில் உள்ளன.		
(இ)	2025 மார்ச் 31 ஆம் திகதியன்றிருந்தவாறு விவசாயிகளிடமிருந்து பெறப்பட வேண்டிய கடன் தொகையாக மொத்தம் ரூபா 2,009,435,000 காட்டப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கைகளின்படி, இக்கடன்கள் பயிர்ச்செய்கைக் காலத்தை அடுத்து உடனடியாக மூன்று கட்டங்களாக மீட்டெடுக்கப்பட வேண்டும். இருப்பினும், உடன்படிக்கையின்படி கடன்களை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, கடன்கள் வழங்கப்பட்டு 03 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், ரூபா 132,842,093 தொகையானது இன்னும் மீட்டெடுக்கப்படாத கடன் நிலுவையாகக் காணப்படுகிறது.	2025 மார்ச் 31 ஆம் திகதியன்றிருந்தவாறு, விவசாயிகளுக்கான கடன்களில் மொத்தம் ரூபா 132.84 மில்லியன் மூன்று வருடங்களுக்கும் மேலாக நிலுவையாகக் காணப்பட்டதை முகாமைத்துவம் ஒப்புக்கொண்டது. 2025 அக்டோபர் 31 ஆம் திகதியாகும்போது, அதில் 9.68 மில்லியன் ரூபா (சுமார் 7%) மீட்டெடுக்கப்பட்டிருந்தது. நிலம் மட்டத்திலான சவால்கள் காரணமாக கடன்களை மீட்டெடுக்கும் செயல்முறை மந்தகதியில் உள்ளபோதிலும், கம்பனி நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து வருவதுடன், வசூலிப்பை மேம்படுத்துவதற்கான உத்திகளையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது	கடன் மீட்புக் கண்காணிப்பு வழிமுறைகள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், கடன் உடன்படிக்கைகளின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க கடனை மீட்டெடுப்பதற்கான காலக்கெடு கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
(ஈ)	2025 மார்ச் 31 ஆம் திகதியன்றிருந்தவாறு சர்க்கரைத் தொழிற்சாலைக் களஞ்சியங்களின் கணக்காய்வின் போது, ரூபா 649,563,463 பெறுமதியான 10,807.8 மெட்ரிக் தொன் சர்க்கரையும், ரூபா 1,450,370,347 பெறுமதியான 2,504,608 லீற்றர் அதி-தூய மதுசாரம் (ENA) களஞ்சியங்களில் காணப்பட்டன. இது தொடர்பாக, மொத்தக் கையிருப்பில் ரூபா 57,908,078 பெறுமதியான 7,785.50 மெட்ரிக் தொன் சர்க்கரையும் (155,710 மூடைகள்) மற்றும் 100,000 லீற்றர் அதி-தூய மதுசாரமும் (ENA) வாங்குபவர்களுக்கு விற்கப்பட்டிருந்த போதிலும், அவை கம்பனியின் விநியோகக் களஞ்சியங்களிலிருந்து எடுத்துச் செல்லப்படாமல் உள்ளன. பொருட்களை இரண்டு வாரங்களுக்குள் எடுத்துச் செல்ல வேண்டும் என கம்பனியின் கொள்கை நிபந்தனை விதித்துள்ள போதிலும், 1 முதல் 9 மாதங்களுக்கு முன்னர் விற்கப்பட்ட இந்தப் பொருட்கள் இன்னும் களஞ்சியப்படுத்தப்பட்டே வைக்கப்பட்டுள்ளன. இவ்வளவு நீண்டகாலத் தாமதம் ஏற்பட்டிருந்த	நாட்டுச் சர்க்கரை வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைந்ததால், அதன் கையிருப்பு பெருமளவில் தேக்கமடைந்துள்ளது. உள்நாட்டுத் தொழிற்சாலைகள் இறக்குமதி செய்யப்படும் வெள்ளைச் சர்க்கரையிடமிருந்து கடுமையான போட்டியை எதிர்கொள்வதுடன், 2024 ஜனவரியில் விதிக்கப்பட்ட புதிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) நிலைமைகளை மேலும் கடினமாக்கியுள்ளது. காசுப்பாய்ச்சலைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, கம்பனி 2024 ஆம் ஆண்டில் குறைந்த விலையில் விற்பனை செய்ய ஏனைய தொழிற்சாலைகளுடன் இணைந்து பணியாற்றியது. எனினும், வாடிக்கையாளர்களால் அந்த விலைகளிலும் சர்க்கரையை விற்க முடியாமல் போனதால், அது விநியோகக் களஞ்சியங்களிலேயே தங்கிவிட்டது. பொருட்களை எடுத்துச் செல்லாததற்காக அபராதம் விதிப்பது நல்லதொரு தெரிவாக இருக்கவில்லை, ஏனெனில் அது வாடிக்கையாளர்களை நிறுவனத்தை விட்டு விலக்கிச் செல்ல வழிவகுக்கலாம்	விற்கப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்வதற்கான கண்டிப்பான காலக்கெடு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், விநியோகக் களஞ்சியங்களின் நீண்டகால ஆக்கிரமிப்பினைத் தடுப்பதற்காகப் பொருத்தமான அபராதங்கள் அல்லது திருத்தப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

	போதிலும், இந்நிலைமையைக் கையாள்வதற்கு கம்பனி எவ்வித பயனுள்ள நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை என்பதுடன், வாங்குபவர்களின் சார்பில் விற்கப்பட்ட அப்பொருட்களைத் தனது விநியோகக் களஞ்சியங்களிலேயே தொடர்ந்து சேமித்து வருகின்றது.		
(உ)	நான்கு பிரதான மின் இணைப்புகளுக்கான மாதாந்த மின்சாரக் கட்டணங்கள் சரியான நேரத்தில் செலுத்தப்படவில்லை, இதன் காரணமாக மீளாய்வாண்டில் இலங்கை மின்சார சபையினால் ரூபா 2.75 மில்லியன் மேலதிக வட்டிக்கட்டணங்கள் விதிக்கப்பட்டுள்ளது.	விற்கப்படாமல் தேங்கிக்கிடந்த சர்க்கரை மற்றும் அதி-தூய மதுசாரம் காரணமாக ஏற்பட்ட தாமதங்கள், அக்காலப்பகுதியில் காசுப்பாய்ச்சல் நெருக்கடியைத் தோற்றுவித்தன.	மேலதிக வட்டிக்கட்டணங்கள் மற்றும் தேவையற்ற நிதி இழப்புகளைத் தவிர்ப்பதற்காக, மாதாந்த மின்சாரக் கட்டணங்கள் தாமதமின்றி செலுத்தப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவக் கருத்துரை	பரிந்துரை
(அ)	கணக்காய்வின் போது, உண்மையான ஏலம் 750 மெட்ரிக் தொன்னிற்காகக் கோரப்பட்டிருந்த போதிலும், 2024 ஜூலை 11 ஆம் திகதியன்று 250 மெட்ரிக் தொன் சீனி 81,125,000 ரூபாவிற்கு விற்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இரண்டு கம்பனிகள் ஒரே மாதிரியான ஏலப்புள்ளிகளை சமர்ப்பித்திருந்த போதிலும், அந்நிறுவனத்தின் நிதித்திறனைச் சரிபார்க்காமல் அதற்கு இந்த ஏலம் வழங்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மொத்தத் தொகையில் ரூபா 10,000,000 மட்டுமே பெறப்பட்டுள்ளதுடன், ரூபா 71,125,000 நிலுவையாகக் காணப்படுகிறது. இக்கொடுக்கல் வாங்கலானது கம்பனியின் காசு அடிப்படையிலான விற்பனைக் கொள்கையையும் மீறியுள்ளது. ரூபா 71,125,000 பெறுமதியான 219.18 மெட்ரிக் தொன்னிற்கான பணம் இன்னும் செலுத்தப்படாமல் உள்ளதால், அது விற்கப்பட்ட விலையான ஒரு கிலோகிராம் ரூபா 324.50ற்கு பதிலாக, தற்போதைய சந்தை விலையான ஒரு கிலோகிராம் ரூபா 271.40ற்கு	விற்பனைக்காக வழங்கப்பட்ட 750 மெட்ரிக் தொன்னில், 250 மெட்ரிக் தொன் மட்டுமே விற்கப்பட்டது. நீண்டகால வாடிக்கையாளரான குறித்த கொள்வனவாளர், ரூபா 10 மில்லியனை பகுதியளவு கொடுப்பனவாகச் செலுத்தியதுடன், எஞ்சிய தொகையைச் செலுத்துவதற்கு மேலதிக அவகாசம் கோரினார். வழக்கமாக பொருட்களை அனுப்புவதற்கு முன்னர் முழுமையான கொடுப்பனவும் செலுத்தப்பட வேண்டும் என்ற போதிலும், அவர்களுடனான பலமான உறவுமுறை காரணமாக முகாமைத்துவம் இப்பகுதியளவு கொடுப்பனவை ஏற்றுக்கொண்டது. கொள்வனவாளர் எஞ்சிய தொகையைச் செலுத்தத் தவறிய போது, விற்பனைக் குழு விற்கப்படாத பகுதியை ஒரு கடன் குறிப்பு மூலம் ரத்து செய்தது. பின்னர் எஞ்சிய கையிருப்பினை வேறு விலைகளில் விற்பனை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், சந்தைத் தேவை குறைவாகக் காணப்பட்டதால் தோல்வியடைந்தன.	அதிக பெறுமதி வாய்ந்த விற்பனைகளை அங்கீகரிப்பதற்கு முன்னர், வாங்குபவர்களின் நிதித்திறன்முறையாக மதிப்பிடப்பட வேண்டும் என்பதுடன், காசு அடிப்படையிலான விற்பனைக் கொள்கை கட்டாயம் பின்பற்றப்படுதல் வேண்டும்.

விற்கப்பட வேண்டியுள்ளது. இதனால் ரூபா 11,638,636 சாத்தியமான நட்டம் ஏற்படக்கூடும்.

(ஆ)	இக்கம்பனியானது 2009 ஆகஸ்ட் 20 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 30 வருட காலப்பகுதிக்காக கிங்குரான தொழிற்சாலை வளாகத்தின் காணி மற்றும் கட்டடங்களுக்கான குத்தகை உரிமைகளைப் பெற்றிருந்தது. அதற்கமைய, ரூபா 294 மில்லியன் தொகையானது பயன்படுத்துவதற்கான உரிமைச் சொத்தாக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் இச்சொத்து 2024/2025 ஆம் ஆண்டில் ரூபா 3,517 மில்லியனாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், குத்தகைக் காலம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இலங்கை அரசாங்கத்திற்கு எவ்வித இலாபப் பரிமாற்றங்களோ அல்லது குத்தகைவகை செலுத்துகைகளோ மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த ஏற்பாடு தொடர்பான குத்தகை உடன்படிக்கை கணக்காய்வு சரிபார்ப்பிற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், 2009 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை செலுத்த வேண்டிய குத்தகை வாடகைகள் கணக்கிடப்படவோ அல்லது நிதிக்கூற்றுக்களில் கணக்கில் காட்டப்படவோ இல்லை	கம்பனி கொண்டுள்ள ரூபா 222 மில்லியன் பெறுமதியான ஆலை, உபகரணங்கள், வாகனங்கள் போன்றவற்றிலும், மற்றும் 30 வருட காலப்பகுதிக்கான காணி மற்றும் கட்டடங்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையின் நிகர தேறிய இற்றைப் பெறுமதியான ரூபா 294 மில்லியனிலும் அரசாங்கம் 51 சதவீதம் சாதாரண பங்குரிமையைக் கொண்டுள்ளது. கம்பனியினால் அவ்வப்போது பிரகடனப்படுத்தப்படும் சாதாரண பங்குகளுக்கான இலாபப்பங்குகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் உரித்துடையதாகும். இதற்கு முன்னர், கம்பனியின் பணிப்பாளர் சபையினால் இலாபப்பங்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், கம்பனியின் கடன் தீர்ப்பனவுத் திறன் இன்மையால் அதனைச் செலுத்த முடியாமல் போனது. எனவே, இலாபப்பங்கைத் தவிர, குத்தகை வாடகையையோ அல்லது ஏனைய நிதி ரீதியான கொடுப்பனவுகளையோ பங்குதாரர்களுக்குச் செலுத்துவதற்கு கம்பனி பொறுப்பாகாது.	குத்தகை உடன்படிக்கையானது முறைப்படி உருவாக்கப்பட்டு கணக்காய்வு சரிபார்ப்பிற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், செலுத்தப்பட வேண்டியுள்ள நிலுவைக் குத்தகை வாடகைகள் கணக்கில் காட்டப்பட்டு, கடன் தீர்ப்பனவு திறனை மேம்படுத்தும் அதேவேளை அரசாங்கத்திற்கான நிதிசார் கடப்பாடுகளும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டும்

3.3 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துழச	பரிந்துரை
இக்கம்பனி 2022 செப்டம்பர் 12 ஆம் திகதியன்று ஒரு கம்பனியிடமிருந்து ரூபா 68,500,000 மதிப்பில் MCPA 60 மற்றும் டியுரான் உயிர்-வேதிப்பொருட்களைக் பெறுகை செய்திருந்தது. இது தொடர்பில், சாதாரண பெறுகை நடைமுறைக்கு வழக்கமாக 26 நாட்கள் தேவைப்படும். எனினும், இப்பெறுகைச் செயல்முறை 2022 செப்டம்பர் 12 ஆம் திகதியன்று	சந்தையில் ஏற்பட்ட தட்டுப்பாட்டின் போது முன்னணி விநியோகஸ்தர்களால் வழங்க முடியாமல் போனதால், கரும்புகளைக் கட்டுப்பாட்டிற்காக கல்லோயா பெருநிறுவனக் கம்பனி அவசரத் தேவையாக MCPA 60 மற்றும் டியுரான் ஆகியவற்றை அவசர	அவசர கால பெறுகை நடைமுறைகள் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதுடன், வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக பெறுகைக்குப் பின்னரான மீளாய்வுகளும் நடாத்தப்பட வேண்டும். சரிபார்க்கப்பட்ட விநியோகஸ்தர்களிடமிருந்து மாத்திரமே பெறுகை மேற்கொள்ளப்பட

ஆரம்பிக்கப்பட்டு, அதற்கு அடுத்த நாளே கொடுப்பனவும் செலுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் வெறும் 2 நாட்களில் இந்நடவடிக்கை முழுமையாக்கப்பட்டுள்ளமையானது, கொடுக்கல் வாங்கலின் செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்குகிறது மேலும், பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தரின் விபரங்களை கம்பனி கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்காததால், அவ்விநியோகஸ்தரின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த முடியாமல் போயுள்ளது. அத்துடன், அவ்விநியோகஸ்தரிடம் பூச்சிக்கொல்லிப் பதிவிற்கான அங்கீகாரம் இல்லை என்பதும் கண்டறியப்பட்டது.

பெறுகையாக செய்தது. SLS சான்றளிக்கப்பட்ட மாதிரி ஒன்று திருப்திகரமாகப் பரிசோதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, விநியோக அபாயங்கள் காரணமாக முகாமைத்துவம் பெறுகை நடவடிக்கையை மேற்கொண்டது. இதனால் ஏற்பட்ட நட்டத்தை மீட்டெடுப்பதற்கான சட்ட நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டு வருகிறது. இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக நாடு தழுவிய அளவில் விவசாய இரசாயனங்கள் மற்றும் உரங்களுக்கு ஏற்பட்ட பற்றாக்குறையின் போதே இச்சம்பவம் நிகழ்ந்தது.

வேண்டும் என்பதுடன், முழுமையான மற்றும் துல்லியமான பதிவுகள் பேணப்பட வேண்டும்